**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**

**சட்டமாணி பட்டப்படிப்புத்திட்டம் - மட்டம் 5**

**LLU5709 / LWU3311 - நிர்வாகச் சட்டம்**

**இறுதிப் பரீட்சை – 2000/2021 (திறந்த புத்தகப் பரீட்சை)**

**கால எல்லை - மூன்று (03) மணித்தியாலங்கள்**

---

**திகதி: 15 செப்ரெம்பர் 2021** **நேரம் : மு.ப. 09.30 – பி.ப 12.30**

**நான்கு (04)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

ஒவ்வொரு வினாவும் இருபத்து – ஐந்து (25) புள்ளிகளுக்குரியது.

1. மாசிடோனியா நாட்டின் 2002ம் ஆண்டின் 40ம் இலக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மாசிடோனியாவின் மின்சார விநியோக சேவையில் உற்பத்தி, அனுப்பீட்டு முறை, விநியோகம், நம்பகத்தம்மை ஆகியவற்றில் இருந்து எழும் அபாயங்களில் இருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்காக, மின்சார துறையில் பொருளாதார, தொழில்நுட்ப, பாதுகாப்பு ஒழுங்கமைப்பாளராக செயற்படுவதற்கான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. குறித்த சட்டத்தின் பிரிவு 12, குறித்த ஆணைக்குழு அங்கீகாரம் வழங்க எண்ணம் கொண்டிருக்கும், ஒரு புதிய மின்சாரத் திட்டத்திற்கான ஒரு விண்ணப்பம் கிடைக்குமிடத்து, குறித்த புதிய மின்சார திட்டத்தினால் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள நபர்களின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, ஆணைக்குழுவினால் பொருத்தமானதென தீர்மானிக்கப்படும் அத்தகைய முறையில் ஆணைக்குழு அதன் எண்ணத்தினை பிரசுரிக்க வேண்டும். மேலும் பிரிவு 12 (அ) மேற்குறித்த பிரசுரம் மூன்று மொழிகளிலும் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பீடு செய்கிறது.

   “பார்க் வியூ” ஹொட்டலுக்கான மின்சார விநியோகத்திற்காக கடுவல வீதியின் இடது பக்கமாக ஒரு உயர் அழுத்த மின் வழங்கலை நிர்மாணிப்பதான குறித்த புதிய மின்சார திட்டத்திற்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. விமல், ராஜேந்திரா, நாமல் ஆகியோர் கடுவல வீதியின் இடது பக்கமாக அமைவிடத்தினைக் கொண்ட ஆதனங்களின் சொந்தக்காரர்கள் ஆவர். அவர்கள் மேற்குறித்த சட்டப் பிரிவு 14ன் கீழ் ஆணைக்குழுவுக்கு குறித்த முன்மொழியப்பட்ட மின்சார விநியோக திட்டம் தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை எனக் கோரியும், குறித்த திட்டம் மின்னல் தாக்கம், மற்றும் புற்றுநோய் உள்ளடங்கலாக தீவிர சுகாதார ஆபத்துக்களுக்கு தம்மை உட்படுத்தி பாரிய அபாய நிலையை உருவாக்கும் எனக் கோரியும் மனு ஒன்றினை சமர்ப்பித்தனர்.

குறித்த சட்டத்தின் பிரிவு 15, ஏதேனும் மனு தொடர்பிலான விசாரணை ஆறு வாரங்களைக்கொண்ட ஒரு கால எல்லையினுள் நடாத்தப்பட வேண்டும் என ஆணைக்குழுவினை பணிக்கின்றது. அத்துடன் குறித்த சட்டத்தின் பிரிவு 4 ஒரு தெருவின் மீது அல்லது மேலாக ஒரு மின்சார வழங்கலை இடுவதற்கு, பொருத்தமான பிரதேச சபையிடம் இருந்து அனுமதி பெறப்பட வேண்டும் என ஆணைக்குழுவினை பணித்து ஏற்பாடு செய்கிறது. குறித்த சட்டத்தின் பிரிவு 5, பிரதேச சபைக்கு செய்யப்படும் வேண்டுகோளின் போது, அதற்கு, மேலதிகமான ஆவணமாக முன்மொழியப்பட்ட மின் திட்டத்திற்கு பிரத்தியேகமான கிடைக்கக்கூடிய, மாற்றாக வழங்கலுக்கான வழியினைக் கூறும் ஒரு மூலோபாய அறிக்கையினையும் ஆணைக்குழு இணைத்து வழங்கலாம் எனக் கூறுகிறது.

ஆணைக்குழுவானது ஒரு விசாரணையினை கடுவல வீதியின் வலது பக்கத்தில் அமைவிடம் கொண்டுள்ள ஆதனங்களின் ஒரு தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் பங்குபற்றுதலுடன் நடத்தி முடித்துள்ளதாக தமக்கு அறிய கிடைத்ததாகவும் மேலும் பிரதேச சபையிடம் மூலோபாய அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்காமல் மேற்குறித்த தீர்மானத்திற்கு ஆணைக்குழு வந்திருப்பதாகவும் அவர்கள் கோருகின்றனர்.

மேற்குறித்த விபரங்களின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

அ) இவ்வினாவில் பொதிந்துள்ள சட்டப் பிரச்சனைகளை அடையாளங் காண்க.

(15 புள்ளிகள்)

ஆ) பொருத்தமான நிவாரணங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட திறத்தவர்களுக்கு அறிவுரை வழங்குக.

(10 புள்ளிகள்)

உமது விடை இயைபான சட்ட கோட்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களுடன் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

2. 1978ம் ஆண்டின் 1ம் இலக்க காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 38(அ) குறித்த அமைச்சர், ஏதேனும் காணியினை, எக்காலத்திலும், ஏதேனும் உடனடித் தேவைக்காக அல்லது பொதுப் பயன்பாட்டுக்காக உடனடியாக உடமை கொள்ள வேண்டிய தேவை ஏற்படுமிடத்து, பிரிவு 2ன் கீழ் குறித்த காணி அமைவுற்றிருக்கும் பிரதேசத்தில் ஒரு அறிவித்தலை முதற்தரம் காட்சிப்படுத்தியதன் பின்னர் கட்டளை ஒன்றை ஆக்கலாம். பிரிவு 39(1)ன் பிரகாரம், குறித்த அமைச்சர் ஏதேனும் பொதுப் பயன்பாட்டுக்காக குறித்த சுவீகரிக்கப்பட்ட காணி நடைமுறையில் உபயோகிக்கப்படாதவிடத்து ஒரு உடனடுத்த கட்டளையினை வர்த்தமானியில் பிரசுரித்து குறித்த கட்டளையை இரத்து செய்யலாம்.

   2015ம் ஆண்டு குறித்த அமைச்சர், பண்டாரவுக்குச் சொந்தமான ஒரு 19 ஏக்கர் காணியினை சுவீகரிக்க, நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், நகரத்தில் வர்த்தக நடவடிக்கைகளுக்கான பொருத்தமான வசதிகளின் மிக மோசமான குறைபாடு காணப்படுவதனால் ஒரு கடைத் தொகுதியினை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதை அறிவித்து ஒரு கட்டளையாக்கினார்.

குறித்த அங்கீகரிக்கப்பட்ட நகர அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம், உடமையாக்கப்பட்ட 18 ஏக்கர் காணியில், 35 பேர்ச்சர்ஸ் விஸ்தீரணமான காணியே கடைத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக தேவைப்படுத்தப்பட்டுள்ளதையும், உடமையாக்கப்பட்ட மிகுதிக் காணி எவ்வித பொதுப் பயன்பாட்டுக்காகவும் உபயோகப்படுத்தப்படவில்லை என்பதையும் 2015 – 2020 வரையான காலப்பகுதியை கூர்ந்து ஆராய்ந்து பண்டார கண்டுபிடிக்கின்றார். ஜனவரி 2021ம் ஆண்டு, கடைத் தொகுதிக்காக நடைமுறையில் தேவைப்படுத்தப்பட்ட காணியினை மட்டும் தொடர்ந்து கைக்கொண்டிருக்க கட்டளை ஆக்குமாறு குறித்த அமைச்சரிடம் பண்டார வேண்டுகேள் விடுத்தான். ஒரு மாதத்தினுள் இவ்விடயத்தினை தீர்த்து வைப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். எனினும் இன்றுவரை குறித்த விடயத்தினை தீர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அமைச்சருக்கு எதிராக ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுக்கலாமா என்பது தொடர்பில் பண்டார உமது ஆலோசனையை வேண்டி நிற்கின்றார்.

பண்டாரவுக்கு அறிவுரை வழங்குக.

உமது விடையை பொருத்தமான அதிகாரங்களுடன் ஆதாரப்படுத்துக.

3. நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஆணையாளர், அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவற்றுடன் நுகர்வுப் பொருட்களின் உச்ச விலைகள் தொடர்பில் பொதுவான மற்றும் குறிப்பான நெறிப்படுத்தல்களை உற்பத்தியாளர்கள் அல்லது வர்த்தகர்களுக்கு வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். அவர், தானாகவோ அல்லது எழுத்து மூலமான ஏதேனும் முறைப்பாடு கிடைக்கப்பெறுவதன் மீதோ ஒரு விசாரணையினை நடாத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். 2021 மே மாதம், நாட்டு நிலமைகளைக் கருத்திற் கொண்டு அரிசியின் உச்ச மொத்த விற்பனை விலையினை குறிப்பீடு செய்து ஆணையாளர் ஒரு குறிப்பான நெறிப்படுத்தல்களை வழங்கினார். “KK அரிசி ஆலை”க்கு எதிராக ஆணையாளருக்கு எண்ணற்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. குறித்த அரிசி ஆலையின் சொந்தக்காரரான சில்வா குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்கு அரிசி விற்பனை செய்ய மறுக்கின்றார் என்றும், அவருடைய உற்பத்தித் தரம் மிக தாழ்ந்தது எனவும் ஒரு உற்பத்தியாளரும், மொத்த விற்பனை வர்த்தகரும் குற்றச்சாட்டுகின்றார். இதனை தொடர்ந்து, இவ்விடயத்தினை விசாரணை செய்வதற்கு ஒரு குழுவினை ஆணையாளர் நியமித்தார். குறித்த குழுவானது ஆணைக்குழுவின் உதவி ஆணையாளரையும், இரு சிரேஸ்ட ஊழியர்களையும் உள்ளடக்கியிருந்தது. மேற்குறித்த இரு குற்றச்சாட்டுக்களின் மீதும் குற்றப்பத்திரத்தினை வழங்கி, 15 யூலை 2021 திகதியன்று குறித்த குழு விசாரணையொன்றினை நடாத்த தீர்மானித்தது. எனினும், சில்வா தனது தாயார் குறித்த நாளில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக கோரி குறித்த விசாரணையினை தவணையிடக் கோரியிருந்தார். எனினும், அவரது வேண்டுகோளை குழு நிராகரித்ததுடன், சில்வாக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்களிடம் இருந்து சாட்சியங்களை கோரியதுடன், சில்வா தன் சார்பில் ஒரு சட்டத்தரணியை நியமிக்க கோரப்பட்டதும் நிராகரிக்கப்பட்டது. குறித்த குழு, ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட மிகக்குறைந்த கொள்வனவு விலையிலும் பார்க்க குறைந்த விலைக்கு அதாவது விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ 30 ரூபாவிற்கு அவன் கொள்வனவு

செய்துள்ளதாகவும் சாட்டியுரைத்தது. விசாரணை நாளில், பிரபலமான "களனி அரிசி ஆலை"யின் சொந்தக்காரரான றுவான், உதவி ஆணையாளருடன், அவரது அறையில் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டதை சில்வா காணுற்றான். குறித்த விசாரணை ஒரு மணித்தியாலத்தில் நிறைவுற்று குறித்த குழுவின் தீர்மானம் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. குழுவின் தீர்மானத்திற்கு அமைய ஆணையாளர் சில்வாவின் மொத்த விற்பனை உரிமத்தினை ஒரு வருடத்திற்கு இடைநிறுத்தினார்.

ஆணையாளரின் தீர்மானத்தில் அதிருப்தி அடைந்திருக்கும் சில்வா, குறித்த ஆணையாளரின் தீர்மானத்தினை சவாலுக்குட்படுத்தலாமா என்பது தொடர்பில் உம்முடன் ஆலோசிக்கின்றார்.

அறிவுரை வழங்குக.

உமது விடையை இயைபான அதிகாரங்களுடன் ஆதாரப்படுத்துக.

4. நியூலாந்தின் தேசிய துறைமுக அதிகாரசபைச் சட்டம், துறைமுக அதிகார சபையின் தொழில் பெறுனர் தொடர்பிலான பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பில், அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவற்றுடன் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு, தேசிய துறைமுக அதிகார சபைக்கு, அதிகாரம் வழங்கியுள்ளது. குறித்த சட்டத்தின் பிரிவு 30, குறித்த அதிகாரசபையின் தீர்மானத்தில், அதிருப்தி அடைந்த திறத்தவர்கள், குறித்த அதிகார சபையினால் தீர்மானம் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள், நிர்வாக மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு, மேன்முறையீடு செய்யலாமென குறிப்பீடு செய்கின்றது. குறித்த சட்டத்தின் பிரிவு 40, பதவியுயர்வுகள் தொடர்பிலான அனைத்து விண்ணப்பங்களும், குறித்த சட்டத்தின் அட்டவணை I இல் நிரல் படுத்தப்பட்டுள்ள உயர் கல்வித் தகைமையின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டுமென குறிப்பீடு செய்கின்றது. மேலும் குறித்த சட்டம், எவரும் இடமாற்றத்திற்காக தீவளாவிய ரீதியில் விண்ணப்பிக்கலாம் எனவும் குறிப்பீடு செய்கிறது. 01 ஆகஸ்ட் 2021ல் இருந்து வலுவுக்கு வரும் வகையில் பின்வரும் ஒழுங்குவிதிகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளன.

அ) அனைத்து எதிர்கால மேன்முறையீடுகளும் கூடிய விரைவில் பொறுப்பான அமைச்சருக்கு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் அமைச்சரின் தீர்மானமே இறுதியானதும் முற்றானதும் ஆகும்.

(10 புள்ளிகள்)

ஆ) அனைத்து விண்ணப்பதாரிகளும், அவர்களின் பதவியுயர்வுக்கான விண்ணப்பங்களில் தொழிலாண்மை தகைமைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்க வேண்டும்.

(10 புள்ளிகள்)

இ) அனைத்து எதிர்கால இடமாற்றங்களும் தொடர்புடைய விண்ணப்பங்களும் மாகாணங்களிற்குள்ளாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

(05 புள்ளிகள்)

மேற்குறித்த ஒழுங்குவிதிகளின் வலிதுடமை தொடர்பில் கலந்துரையாடுக.

உமது விடையினை பொருத்தமான அதிகாரங்களுடன் ஆதாரப்படுத்துக.

5. 2005ம் ஆண்டின் 20ம் இலக்க தேசிய சுகாதார சட்டம், குறித்த அமைச்சர், ஒரு தேசிய சுகாதார நிபுணர் பிரிவை (தே.சு.நி.பி) நியமிப்பதற்கு அதிகாரமளிக்கின்றது. குறித்த குழு நாட்டில் மருந்துகளின் இறக்குமதி, உற்பத்தி, மற்றும் விநியோகம் தொடர்பில் ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டத்தின் பிரிவு 35 குறித்த பிரிவு (தே.சு.நி.பி) குறித்த சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள சட்டவாக்க உறுப்பான, தேசிய மருந்துப் பணிமனையின் ஒரு அங்கீகாரத்தின் பின்னர் மட்டுமே மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான ஒரு உரிமத்தினை வழங்க முடியுமென அதிகாரமளித்துள்ளது. குறித்த சட்டத்தின் பிரிவு 50, குறித்த "தே.சு.நி.பி" தீர்மானம் இறுதியானதும் முற்றானதெனவும் ஏதேனும் நீதிமன்றத்தினால் சவாலுக்கு உட்படுத்த முடியாததும் என பிரகடனம் செய்கின்றது. ஜயமன்ன என்னும் பதிவு செய்யப்பட்ட அத்தியாவசிய மருந்துகள் இறக்குமதியாளர், தயரொக்சின் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான ஒரு உரிமத்தினைப் பெறுவதற்கு ஒரு விண்ணப்பத்தினை அனுப்பியிருந்தார். எனினும் "தே.சு.நி.பி", தேசிய மருந்துப் பணிமனையின் அங்கீகாரமின்றி தயரொக்சின் மருந்துகளை ஒரு அத்தியாவசிய மருந்தாக நிரல்படுத்தமுடியாது என்ற காரணத்தின் மீது குறித்த விண்ணப்பத்தினை நிராகரித்தது. குறித்த தீர்மானத்திற்கான மேன்முறையீட்டின் பின்னர், குறித்த மருந்தின் வேறொரு தரவகையினை அவனால் இறக்குமதி செய்யப்படும் மொத்தக் கொள்ளளவின் பெறுமதிக்கு 15வீத மேலதிக வரியுடன் இறக்குமதி செய்யலாம் என ஒரு உரிமத்தினை வழங்க "தே.சு.நி.பி" உடன்பட்டது. "தே.சு.நி.பி" தனது தீர்மானத்திற்கான காரணங்களை தர மறுத்துள்ளது.

ஜயமன்ன, "தே.சு.நி.பி"ன் தீர்மானத்தினை ஒரு நீதிமன்றின் முன் சவாலுக்கு உட்படுத்தலாமா என்பது தொடர்பில் உம்முடன் கலந்தாலோசிக்கின்றார்.

பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின், திருத்தப்பட்டவாறாக 1972ம் ஆண்டின் 18ம் இலக்க பொருள்கோடல் (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளின் குறிப்பான துணையாதாரங்களுடன் அவருக்கு ஆலோசனை வழங்குக.

பதிப்புரிமை பெற்றது